# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1993 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சட்டக் கல்விப் பேரவை (திருத்தச்) சட்டம்

---

*[1993, ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1993, ஆகஸ்ட் மாதம் 13 ஆந் தேதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 | தபாற் செலவு : ரூபா 1.00

## 1993 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சட்டக் கல்விப் பேரவை (திருத்தச்) சட்டம்

[1993, ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 50/91

### சட்டக் கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1993 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சட்டக் கல்விப் பேரவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

2. சட்டக் கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 2அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:— *276 ஆம் அத்தியாயத்தின் 2அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ), (ஈ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு, அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும்:—

"(இ) சட்டத்துறை-தலைமையதிபதி;

(இஅ) பிரதம நீதியரசரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுபவர்களான உயர் நீதிமன்றத்தின் இரண்டு நீதியரசர்கள்;

(இஆ) மன்றுடியார்—தலைமையதிபதி ;

(இஇ) இலங்கைச் சட்டவறிஞர்கள் கழகத்தினால், அதன் உறுப்பினர்கள் மத்தியிலிருந்து பெயர் குறித்து நியமிக்கப்படும் இரண்டு உறுப்பினர்கள் (இதனகத்துப்பின்னர் "பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" என்று குறிப்பீடு செய்யப்படும்);

(ஈ) சட்ட உயர் தொழிலில் உயர்வான இடத்தை வகிப்பவர்களான ஆட்கள் மத்தியிலிருந்து அல்லது நீதித்துறை பதவியை வகிப்பவர்களான அல்லது வகித்துள்ளவர்களான, அல்லது சட்டப்போதனையில் அல்லது சட்ட ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளவர்களான, அல்லது ஈடுபட்டவர்களான, அல்லது சட்டத்தில் கல்விசார் சிறப்பை எய்தியவரான அல்லது சட்ட அறிவுக்கு ஆக்கமூட்டியவரான ஆட்கள் மத்தியிலிருந்து அமைச்சரால் நியமிக்கப்படும் வேறு ஆறு உறுப்பினர்கள் இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" என்று குறிப்பீடு செய்யப்படும்;

அத்துடன்

2— டி 026951—1,170 (93/04)

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம்:—

"(2அ) பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஒவ்வொரு உறுப்பினரும் மரணத்தின் மூலம், அல்லது பதவி விலகலின் மூலம் அல்லது அகற்றப்படுதலின் மூலம் அவரது பதவி எலவே வறிதாகினாலொழிய, அவர் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று வருடங்கள் கொண்ட காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்; அத்துடன் அவர் மீளப்பெயர் குறித்து நியமிக்கப்படுதலுக்கு தகுதியுடையவராகுதலும் வேண்டும்;

ஆயின், பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவியிலேற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்கு இலங்கைச் சட்டவறிஞர் கழகத்தினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர், எந்த உறுப்பினரை அடுத்துறுகிறாரோ அந்த உறுப்பினரின் பதவிக் காலத்தில் முடிவடையாதிருக்கும் பாகத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்";

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம்:—

"(3அ) பெயர்குறித்து நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் இலங்கைச் சட்டவறிஞர்கள் கழகத்துக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின் மூலம் அவரது பதவியைத் துறக்கலாம்.";

(4) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம்:—

"(4அ) பெயர் குறித்து நியமிக்கப்பட்டவரான எவரேனும் உறுப்பினர் சுகவீனம் காரணமாக அல்லது வேறு உடற்றகுதியீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக பதவியின் கடமைகளைத் தற்காலிகமாகப் புரிவதற்கு இயலாதவராக ஆகுமிடத்து, இலங்கைச் சட்ட வழக்கறிஞர்கள் கழகம், அவ்வுறுப்பினரின் இடத்தில் செயற்படுவதற்கு பொருத்தமும் தகுதியுமான ஆளொருவரைப் பெயர்குறித்து நியமிக்கலாம்";

(5) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் உள்ள "ஐந்து உறுப்பினர்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "எட்டு உறுப்பினர்கள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும், அத்துடன்

(6) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் உள்ள "எவரேனும் உறுப்பினர் நியமனத்தில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் அல்லது பெயர் குறித்த நியமனத்தில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கிநிற்றல்.

3. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 ; (வெளிநாட்டு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், 255, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.